"COVID 19 கால மாற்று உபாய கல்வி நிகழ்ச்சிதிட்டம் - 2020
COVID19 Period Alternative Strategic Education Programme -2020"

வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு மேற்கு

81 விவசாயமும் உணவுத்தொழினுட்பமும் I & II

மாதிரிப் பரீட்சை - 02

தரம் - 11

நேரம் : 3மணி 10 நிமிடம்

பகுதி – I

1. இலங்கையில் அண்மையில் அமைக்கப்பட்ட தெற்காசியாவிலே மிகப் பிரமாண்டமான நீர்த்தேக்கம் எது?
   1. அபயவாவி
   2. பராக்கிரம சமுத்திரம்
   3. மொரக்காகந்த நீர்த்தேக்கம்
   4. பொல்கொல்லை நீர்த்தேக்கம்

2. உறிஞ்சி, குமிழ் மூலம் பதியமுறையில் இனப்பெருக்கும் தாவரங்கள் முறையே
   1. வாழை, இராசவெள்ளி
   2. அன்னாசி, வெங்காயம்
   3. வெங்காயம், லில்லி
   4. வாழை, ஆனைக்கற்றாழை

3. பசுமைப் புரட்சியால் ஏற்பட்ட மாற்றங்களில் தவறானது.
   1. புதிய பயிர்ப்பேதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.
   2. இரசாயனப் பயன்பாடு அதிகரித்தல்.
   3. மேலதிக உணவை சந்தைப்படுத்த முடிந்தமை.
   4. வேலை வாய்ப்பு அதிகரித்தமை.

4. விற்றமின்கள், கனியுப்புக்கள் ஆகியவற்றை அதிகளவில் கொண்ட உணவுகளாவன,
   1. பழங்களும், கீரைவகைகளும்
   2. தானியங்களும், கிழங்குவகைகளும்
   3. இறைச்சியும் தானியவகைகளும்
   4. பருப்புவகைகளும், கிழங்குவகைகளும்

5. ஆளுகை நிபந்தனையின் கீழான பயிர்ச்செய்கையின் முக்கியத்துவங்களுள் தவறானது
   1. குறித்த வலயத்திற்கு பொருத்தமற்ற பயிர்களையும் பயிர் செய்யலாம்
   2. பீடைத்தாக்கம் குறைவு
   3. வருடம் முழுவதும் பயிர் செய்ய முடியாது
   4. இழையவளர்ப்புத் தாவரங்களை வன்மைப்படுத்தலாம்

6. இலங்கையில் அதிக நெல்லுற்பத்தியை வழங்கும் மாவட்டம்
   1. மட்டக்களப்பு
   2. அம்பாறை
   3. பொலநறுவை
   4. கண்டி

7. நபரொருவரின் போசணைத் தேவையை தீர்மானிக்கும் காரணிகளில் பிழையானது
   1. வயது
   2. கர்ப்பிணிநிலை
   3. பால்
   4. நாடு

8. உலர் வலயத்திற்கு மழை கிடைக்கும் முறை
   1. தென்மேல் பருவப்பெயர்ச்சிக்காற்றுமழை
   2. வடகீழ் பருவப்பெயர்ச்சிக்காற்றுமழை
   3. சூறாவளிமழை
   4. உகைப்புமழை

9. வித்துக்களில் நிரோதிப் பதார்த்தங்கள் காரணமாக உறங்குநிலை ஏற்படக்கூடிய வித்து
   1. தேக்கு
   2. இபில்இபில்
   3. தக்காளி
   4. பருத்தி

10. வித்து முளைதிறன் பரிசோதனை ஒன்றிற்காக மாணவன் ஒருவன் 400 வித்துக்களைப் பெற்று முளைக்க விட்ட போது 340 வித்துக்கள் முளைத்தன. இவ்வித்துக்களின் முளைதிறன் சதவீதம் யாது?
    1. 80%
    2. 84%
    3. 75%
    4. 85%

11. பிரதேசங்களுக்கிடையில் வெப்பநிலை வேறுபடுவதற்கான காரணிகளுள் தவறானது
    1. மத்திய கோட்டிலிருந்தான தூரம்
    2. உள்நாட்டு நீர்நிலைகள்
    3. குத்துயரம்
    4. அமுக்கம்

12. அண்மைய வகைப்படுத்ததலுக்கமைய இலங்கை சூழலியல் வலயங்களின் எண்ணிக்கை
    1. 3
    2. 24
    3. 46
    4. 7

13. மண் கூறுகளுள் 45% அளவில் பரம்பிக் காணப்படும் மண் கூறு எது?
    1. மண்ணீர்
    2. மண்ணங்கி
    3. மண் கனிப்பொருள்
    4. மண் வளி

14. வளிமண்டலத்திலுள்ள நீராவியின் அளவு எவ்வாறு அழைக்கப்படும்?
    1. ஈரப்பதன்
    2. வெப்பநிலை
    3. காற்று
    4. ஆவியாதல்


15. மழைபெய்ததும் மேலதிகமாக தேங்கிநின்ற நீர் வழிந்தோடியதும் மண்ணில் எஞ்சியுள்ள நீர் அல்லது நீர் வகைகள்
    1. மயிர்த்துளை நீரும், புவியீர்ப்பு நீரும்
    2. பருகு நீரும், புவியீர்ப்பு நீரும்
    3. பருகு நீரும், மயிர்த்துளை நீரும்
    4. பருகு நீர்

16. சொலனேசியே குடும்பப் பயிர்களைக் கொண்ட கூட்டம்
    1. பாகல், மிளகாய், உருளைக்கிழங்கு
    2. வெண்டி, மிளாய், கத்தரி
    3. மிளகாய், உருளைக்கிழங்கு, கத்தரி
    4. கத்தரி, அவரை, மிளகாய்

17. மண்ணைத் தூர்வையாக்கும் செயற்பாட்டிற்கு வழங்கும் பொதுவான பெயர்
    1. முதலான பண்படுத்தல்
    2. துணையான பண்படுத்தல்
    3. பாத்தியமைத்தல்
    4. சேறாக்கல்


18. சர்வதேச மண்ணியல் சங்கத்தின் வகைப்படுத்தலில் களிமண்ணின் விட்டம்
    1. 2mm
    2. 0.002mmகீழ்
    3. 0.02 - 0.002mm
    4. 0.2 - 0.02mm

19. படத்தல் காட்டப்பட்டுள்ள நீர் வடிப்பு முறை
    1. சுமாந்தர முறை
    2. கிருட்டு அயன் முறை
    3. ஹேறிங்கின் மீன் முள்ளு முறை
    4. இயற்கை வடிகால்



20. ஒரு பயிர்ச்செய்கையின் உப விளைவை இன்னுமொரு பயிர்ச்செய்கையின் மூலப்பொருளாக பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை
    1. ஒன்றிணைந்த பயிர்ச்செய்கை
    2. இடைப்பயிர்ச்செய்கை
    3. சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை
    4. கலப்புப் பயிர்ச்செய்கை

21. அருகில் காட்டப்பட்டுள்ள கட்டமைப்பை பெயரிடுக
    1. ஞாயிற்று இனப்பெருக்கி
    2. பாத்தி மறைப்பிடல்
    3. சால் மறைப்பிடல்
    4. பொலித்தின் கூடாரம்




22. தாவர வளர்ச்சிக்கு அத்தியாவசிய மூலகங்களின் எண்ணிக்கை
    1. 10
    2. 3
    3. 9
    4. 16

23. இலங்கையின் தாழ்நாட்டு உலர்வலயத்தில் பாலுற்பத்திக்கென வளர்ப்பதற்கு மிகப் பொருத்தமான மாட்டு வர்க்கம்
    1. ஜேர்சி
    2. பிறிசியன்
    3. அயர்சயர்
    4. சிந்தி

24. வெண்ணிறமானதும், நீரில் கரையக்கூடியதும், நைதரசன் அளவு அதிகம் கொண்டதுமான பசளை
    1. யூறியா
    2. மாட்டெரு
    3. பாறைப்பொஸ்பேற்
    4. அமோனியம் சல்பேற்

25. உருவில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பாசன முறை
    1. நிரல்
    2. பாத்தி
    3. மோதிர
    4. சால் பாசனம்



26. கோழிகளுக்கான உணவுப் பங்கீட்டில் சேர்க்கப்படும் புரத உணவுக்கூறு
1. சோளத்தூள் 2. மீன்தூள் 3. சிப்பித்தூள் 4. அரிசித்தவிடு

27. நாற்றுமேடையிலுள்ள நாற்றுக்களை அதிகளவில் தாக்கும் நாற்றழுகல் நோயின் நோய்க்காரணி
1. பற்றீரியா 2. பங்கசு 3. வைரசு 4. நெமற்றோட்டு

28. பசு ஒன்றின் கர்ப்ப காலம் எத்தனை நாட்களாகும்
1. 300 நாட்கள் 2. 270 நாட்கள் 3. 280 நாட்கள் 4. 180 நாட்கள்

29. கோழிக்குஞ்சுகளின் குதத்தினைச் சுற்றிவர வெண்ணிறக் கழிவுகள் ஒட்டியும் கூடியளவு இறப்பு வீதமும் காணப்பட்டது. இதற்கான காரணம்
1. றணிக்கட் நோய் 2. புல்லோரம் நோய் 3. கோழியம்மை 4. கொக்சிடியோசிஸ்

30. வித்துக்களுக்கு கப்ரான் தூள் சேர்ப்பதன் நோக்கம்
1. வித்துக்களில் பூச்சித்தாக்கம் ஏற்படுவதை தடுக்க
2. நாற்றுக்களில் பங்கசு நோய்கள் ஏற்படுவதை தடுக்க
3. நாற்றுக்களுக்கு நுண்மூலங்களை அளித்தல்
4. நாற்றுமேடையில் களைகள் முளைப்பதைத் தடுக்க

31. மணல் மண்ணைப் பயிர்ச் செய்கைக்கு மிகவும் பொருத்தமானதாக்குவதற்கு அம்மண்ணுடன் சேர்க்க வேண்டிய மிகப் பொருத்தமான பொருள்
1. அடையல் மண் 2. களி மண் 3. மரச்சாம்பல் 4. சேதனப்பொருட்கள்

32. களி மண்ணுடன் ஒப்பிடும் போது மணல் மண்
1. இடைவெளி குறைவானது
2. சொரசொரப்பான இழையமைப்புடையது
3. நீரைத்தேக்கி வைக்கும் ஆற்றல் கூடியது
4. மண்வளி குறைவானது

33. நீரில் கரையும் விற்றமின்களாவன
1. A,B 2. A,C 3. B,D 4. B,C

34. மண்ணரிப்பு முறைகளில் தவறானது
1. பரப்பரிமானம் 2. சிதறலரிமானம் 3. கடலரிமானம் 4. ஓடுகால் அரிமானம்

35. அண்மையில் தடை செய்யப்பட்டதும், மீண்டும் பணன்பாட்டுக்கு கொண்டுவர வாதப்பிரதிவாதங்கள் நடைபெறும் களைசாசினி
1. கிளைபொசேற் 2. காபோபியூரான் 3. கப்ரான் 4. DDT

36. இலைச்சித்திர வடிவ நோய்க்கான நோய்க்காரணி
1. வைரஸ் 2. பற்றீரியா 3. பங்கசு 4. புரட்டசோவா

37. மனித உணவில் நச்சுத்தன்மையை ஏற்படுத்தக்கூடிய மரவள்ளிக்கிழங்கில் காணப்படும் பதார்த்தம் யாது?
1. சித்திரிக்கமிலம் 2. தனின் 3. லினமரின் 4. கொபின்

38. டபோக் நாற்றுமேடையிலிருந்து நாற்றுக்கள் பிடுங்கி எடுக்க வேண்டிய கால அளவு
1. 10 2. 14 3. 21 4. 30


39. எத்தனையாம் ஆண்டு முதல் இலங்கையில் உணவு சுட்டுத்துண்டு இடல் சட்ட ரீதயாக அமுலில் உள்ளது
1. 1987 2. 2002 3. 2005 4. 2000

40. குறித்தவொரு உணவு நற்காப்பு முறையில் அதிக வெபபநிலைக்கு உணவு வெப்பமேற்றப்படுவதுடன், அவ்வுணவை குளிரூட்டியில் 7-10 நாட்கள் வரையே சேமிக்க முடியும் குறித்த நற்காப்பு முறை யாது?
1. கிருமியழித்தல் 2. பாய்ச்சராக்கம் 3. கதிரடித்தல் 4. குளிரூட்டல்

பகுதி - II

- **முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. தாவரங்களின் வாழ்க்கைத் தொடர்ச்சிக்கு மிக முக்கியமான தாவரத்தின் பகுதி பூவாகும். வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் வரிபடத்தைப் பயன்படுத்துக.



1. படத்தில் காட்டப்பட்டுள்ள A,B,CD ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
2. A எனக் குறிப்பிடப்பட்ட பகுதியில் கருக்கட்டலுக்கு முன் நடைபெறும் செயற்பாட்டினைப் பெயரிடுக.
3. I எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியின் தொழில் யாது?
4. படத்தில் காட்டப்பட்ட அமைப்பு மூலமாக நடைபெறும் இனப்பெருக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?
5. இயற்கையாக புதிய தாவரங்களை உருவாக்கக் கூடிய பதியமுறை இனப்பெருக்க கட்டமைப்புக்கள் 4 தருக.
6. வித்துக்களின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.
7. வித்து உறங்குநிலை என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.
8. தண்டுத் துண்டங்களில் வேர்கொள்ளலை தூண்டுவதற்கு பயன்படுத்தப்படும் ஓமோன் வகைகள் 2 தருக.
9. ஆப்பொட்டு முறையினை மேற்கொள்வதனை வரிபடம் மூலம் காட்டுக.
10. இழையவளர்ப்பின் அனுகூலங்கள் 2 தருக.

02. தாவரங்களுக்கு நீர்த் தகைப்பு ஏற்படும் பொழுது நீரினை செயற்கையாக வழங்குதல் நீர்ப்பாசனம் எனப்படும்.

1. நீர்வடிப்பு என்றால் என்ன?
2. வடிகால் தொகுதிகளை பட்டியலிடுக.
3. வரம்புசால் பாசன முறையின் படத்தினை தந்து பெயரிடுக.
4. மண்ணிலிருந்து நீர் இழக்கப்படும் முறைகள் 2 தருக.

03. தாவரங்களின் மூலாதாரம் மண்ணாகும், தாவரங்களை நிலைநிறுத்துவது மண்ணாகும்.

1. பாறை வகைகள் எவை?
2. மண்ணுருவாதல் படிமுறைகளை குறிப்பிடுக.
3. பாறைகள் வானிலையாலழிதல் முறைகள் எவை?
4. மண்ணில் காணப்படும் கூறுகளுள் மண்ணீர் எத்தனை சதவீதத்தில் பரந்து காணப்படுகிறது?
5. மண் இழையமைப்பின் முக்கியயத்துவங்கள் 4 தருக.

04. உணவை உரிய நேரத்திலும், உரிய அளவிலும் உள்ளெடுப்பதனால் பின்னாளில் ஏற்படும் நோய்களை தவிர்த்துக்கொள்ளலாம்.

1. உணவில் கலப்படம் செய்யும் சந்தர்ப்பங்கள் 2 தருக.
2. பழுதடைந்த உணவின் இயல்புகள் 2 தருக.
3. நபரொருவரின் உணவின் மூலம் இலிப்பிட்டினை பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவங்கள் 2 தருக.
4. அல்லூட்டம் என்றால் என்ன? அதன் இரு வகைகளையும் குறிப்பிடுக.
5. புரத கலோரிக் குறைபாட்டினால் ஏற்படும் இரு நோய் நிலைமைகள் 2 தருக.

05. பயிர்ச் செய்கையில் விவசாயிகளுக்கு பொருளாதார ரீதியில் சேதத்தை ஏற்படுத்தும் அங்கிகள் பீடைகள் எனப்படும்.



1. இப்பூச்சியின் பெயர் யாது?
2. இப்பூச்சியின் சேதம் ஏற்படுத்தும் பயிர்கள் இரண்டைக் குறிப்பிடுக.
3. இப்பூச்சியின் உருமாற்ற வகை யாது?
4. இப்பூச்சியைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் பெரமோன் பொறியின் படத்தினை வரைந்து பெயரிடுக.
5. பூச்சிநாசினி பயன்படுத்தாது பூச்சிபீடைகளை கட்டுப்படுத்தும் முறைகள் 4 தருக.

06. இலங்கையின் பொருளாதாரத்தினை வளர்த்தெடுக்க அதிக கவனம் செலுத்த வேண்டிய மிக முக்கியமான விவசாயத்துறை கால்நடை வளர்ப்பாகும்.

1. இந்திய மாடுகளுக்கும் ஐரோப்பிய மாடுகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினை அட்டவணைப்படுத்துக.
2. இலங்கையில் உள்ள மாடு வளர்ப்பு முறைகளை குறிப்பிடுக.
3. பசு மாட்டின் வேட்கை அறிகுறிகள் 4 தருக.
4. செயற்கை முறைச் சினைப்படுத்தல் என்றால் என்ன?
5. மாடுகளுக்கு ஏற்படும் கொள்ளை நோய்கள் 2 தருக.

07. மண் தவிர்ந்த பிற ஊடகங்களில் பயிர் செய்தல் நுட்பம் பரவலாக பிரபல்யம் அடைந்து வருகின்றது.

1. மண்ணின்றிய பயிர்ச்செய்கை என்றால் என்ன?
2. மண்ணின்றிய பயிர்ச்செய்கை முறைகளைக் குறிப்பிடுக.
3. திண்ம ஊடகப் பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் ஊடகப் பதார்த்தங்கள் 4 தருக.
4. இலங்கையில் அதிகளவில் பயன்படுத்தப்படும் திரவஊடகப் போசணை ஊடகப் பதார்த்தங்கள் எது?
5. மண்ணின்றிய பயிர்ச்செய்கையின் அனுகூலங்கள் 4 தருக.